## மாகாணக் கல்வித் திணைக்களம்
## வடக்கு மாகாணம்
## துரித கற்றல் கையேடு தரம் :- 04
## தமிழ்

### நாடகம்:- பொதுக் கூட்டம்

கதாபாத்திரங்கள்:
சிங்கம், யானை, முயல், ஓநாய், நரி

சிங்கம் :- இன்று பொதுக்கூட்டத்தைக் கூட்டியுள்ளேன். உங்கள் பிரச்சினைகளைக் கூறுங்கள்.

யானை : காட்டில் எங்களால் வாழ முடியவில்லை.

சிங்கம் : ஏன்! அப்படிச் சொல்கின்றீர்?

யானை : நரியார் எங்களை ஒற்றுமையாக வாழ விடுகிறாரில்லை.

சிங்கம் : ஆச்சரியமாக இருக்கிறதே!

முயல் : சிங்கராசாவே! எங்களுக்குள் பிரச்சினைகளை உருவாக்குகிறார்.

ஓநாய் : நாங்கள் ஒற்றுமையாக இருந்தால் தனக்குப் பாதிப்பு என்று நினைத்துத் தந்திர விளையாட்டு விளையாடுகிறார்.

சிங்கம் : அவருடைய நடவடிக்கையை நானும் கவனித்துக்கொண்டு தான் வருகிறேன். அதுசரி நீங்கள் ஏன் நரியின் சொல்லைக் கேட்கிறீர்கள்?

ஓநாய் : அவர் உதவி செய்வது போல வந்து பிரச்சினைகளை உருவாக்குகின்றார்.

சிங்கம் : நரியாரைப் பற்றித் தெரிந்த பிறகும் நீங்கள் ஏன் அவருடைய கதையைக் கேட்கிறீர்கள்.

யானை : உதவி செய்வது போல் வந்து ஒற்றுமையைக் குலைக்கிறார்.

சிங்கம் : உடனே நரியாரை அழைத்து வாருங்கள்.

நரி : சிங்கராசாவே! என்னை அழைத்தீர்களா?

சிங்கம் : ஆம்

நரி : நான் ஏதும் தங்களுக்கு உதவ வேண்டுமா?

சிங்கம் : நீர் எனக்கு உதவி செய்யத் தேவையில்லை. உபத்திரவம் செய்யாமல் இருந்தால் போதும்.

நரி : அரசே நீங்கள் சொல்வது எனக்குப் புரியவில்லை.

சிங்கம் : புரியவில்லையா? புரியாதது போன்று நடிக்கின்றீரா?

நரி : நான் நடிக்கின்றேனா! தவறு அரசே தவறு.

சிங்கம் : உமது கபட புத்தி எனக்கு நன்றாகத் தெரியும். எனவே என்னிடம் உம்முடைய ஏமாற்றுவித்தை பலிக்காது.

நரி : அரசே என்னைப் பார்த்தா இப்படிக் கூறுகின்றீர்கள். நான் நல்லவன். எல்லோருக்கும் உதவி செய்பவன்.

சிங்கம் : நீர் நல்லவனா! நீர்தான் இங்கு வாழும் மிருகங்களின் ஒற்றுமையைக் குலைக்கின்றீர்.

நரி : அரசே என்னைப் பற்றி யாரோ உங்களிடம் பிழையாகக் கூறிவிட்டார்கள்.

சிங்கம் : எல்லாம் சரியாகத்தான் கூறியுள்ளார்கள். நான் இங்கு வாழும் மிருகங்களின் நன்மை கருதி இந்தக் காட்டை விட்டே ஒதுக்கி வைக்கிறேன். இனி நீர் இந்தக் காட்டுக்குள் நடமாடக்கூடாது. என் உத்தரவை மீறினால் கடுமையான தண்டனையை நான் வழங்குவேன்.

நரி : அரசே, என்னை மன்னித்து விடுங்கள். இனிமேல் இவ்வாறான தவறை நான் செய்யமாட்டேன். தயவு செய்து எனது தண்டனையை மீள்பரிசீலனை செய்யுங்கள்.

1. நாடகத்தின் பெயர் என்ன? ......................................
2. நாடகத்தின் கதாபாத்திரங்கள் எவை? .......................................

   ..................................................................................

3. பொதுக் கூட்டத்தைக் கூட்டியவர் யார்? ...................................
4. முறைப்பாடு தெரிவித்தவர்கள் யார்? ..........................................
5. தெரிவிக்கப்பட்ட முறைப்பாடு என்ன? .........................................
6. சிங்கம் நரிக்கு வழங்கிய தீர்ப்பு என்ன? …………………………………..

   ………………………………………………………………………………………..

7. சிங்கம் நரியின் தண்டனையை மீள்பரிசீலனை செய்திருக்குமா?

   ................................

8. ஆம் எனின் என்ன தீர்ப்பு வழங்கியிருக்கும்?

   ..................................................................................

   ..................................................................................

விகடத் துணுக்கு - 4

“ஓட்டப் போட்டியில் முதல் பரிசு பெற்றதாகக் கேள்விப்பட்டோம். உங்கள் வெற்றிக்கு பின்னால் இருந்தவர்கள் யார்? ”

“எனக்குப் பின்னால் ஓடி வந்தவர்கள்தான்.”